2. அறிவிப்பு

(அ) சட்டமன்ற மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன் வடிவுகள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஒரு அறிவிப்பு. கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள், தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையில் திருத்தங்கள் ஏதுமின்றி, 19-8-1972-ம் நாளன்று நிறைவேற்றப்பட்டன என்று மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1. தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு, கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/72).

2. தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/72).

மேலும், தமிழ்நாடு 1972-ம் ஆண்டு, கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 28/72) பரிந்துரை ஏதுமின்றி, 19-8-1972-ம் நாளன்று சட்டமன்ற மேலவையில் நிறைவேற்றப்பட்டது என்று மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. கவன ஈர்ப்பு

(அ) மணலியிலுள்ள மதராஸ் ஃபெர்டிலைசர்ஸ்-ல் நடந்த ஒப்பந்தத் தொழிலாளர் வேலை நிறுத்தம் குறித்து.

THIRU N. DENNIS: Mr. Deputy Speaker, Sir, I call the attention of the Hon. Minister for Labour to a matter of urgent public importance, namely, the strike by the contract labourers of the Madras Fertilisers in July, 1972.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: துணைத் தலைவர் அவர்களே, சங்கர் என்னும் தொழிலாளி தனது வேலையிடத்தை விட்டு வேறு இடத்திற்குச் சென்று அங்கு மிகுதி நேரம் வேலை

செய்து கொண்டிருந்த தொழிலாளிகளை வேலை நிறுத்தும்படி தூண்டியதாக கூறப்பட்ட குற்றத்திற்காக தற்காலிகமாக வேலை நீக்கம் செய்ததை மறுப்பு தெரிவிக்கும் வகையில் மெட்ராஸ் ஃபெர்டிலைசர்ஸ் பணியாளர்கள் யூனியனைச் சார்ந்த தொழிலாளிகள் திடீரென்று 26-7-1972 அன்று பிற்பகல் 1-15 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். 31-7-72 அன்று சென்னை மூன்றுவது சரக தொழிலாளர் துறை அலுவலர் இரு தரப்பினரையும் அழைத்து ஒரு சமரச உடன்பாடு ஏற்பட பேச்சு வார்த்தைகள் நடத்தி வேலை நிறுத்தத்தை கைவிட அநேக யோசனைகள் எடுத்துக் கூறப்பட்டன. அப்போது நிர்வாகத்தினர் எந்த கோரிக்கை மீதும் பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்கு முன் நிபந்தனையாக தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை கைவிட்டு வேலைக்கு திரும்ப வேண்டும் என்று நிபந்தனை விதித்தார்கள். மேற்படி தொழில் நிறுவனம் தொழில் தகராறு சட்டத்தின் கீழ் அத்தியாவசிய பொருள் உற்பத்தி தொழிலாக விளம்பரப்படுத்தப்பட்டதால் வேலை நிறுத்தத்தை கைவிட்டு வேலையில் சேரும்படி தொழிலாளருக்கு தொழிலாளர் துறை அலுவலரால் அறிவுரை வழங்கப்பட்டது. சமரச பேச்சு வார்த்தைகளுக்கிடையில் 7-8-1972 தேதி அன்று மாலை நிர்வாகத்தினருக்கு சங்கம் ஒரு கடிதத்தில் எவ்வித நிபந்தனையுமின்றி வேலை நிறுத்தத்தை கைவிட்டதென்று தெரிவித்ததோடு 8-8-1972 முதல் எல்லா நேரிடை தொழிலாளர்களும் வேலையில் சேர்ந்தனர். வன் செயலைத் தூண்டிய குற்றத்திற்காக 9 தொழிலாளிகளை விசாரணை முடியும் வரை நிர்வாகம் தற்காலிக வேலை நீக்கம் செய்துள்ளது.

சிப்பங்கட்டி பட்டுவாடா **(packing and delivery)** செய்வதற்காக வேலையில் அமர்த்தப்பட்ட 200 ஒப்பந்த தொழிலாளர்களுள் 75 தொழிலாளருக்கு வேலை கொடுத்து அவர்கள் 8-8-1972 முதல் வேலை செய்ய தொடங்கினர். அவர்கள் கொடுத்த வேலையை முடித்தபிறகு சிப்பங்கட்டவேண்டிய சாமான்கள் இல்லாததால் ஒப்பந்தத் தொழிலாளர்களை அனுப்பும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சிப்பங்கட்டி பட்டுவாடா செய்யும் வேலைக்காக தொழிலாளர்கள் கேட்கப்படவில்லை. இந்த 200 ஒப்பந்த தொழி

1972 ஆகஸ்ட் 23] [திரு. என். வி. நடராசன்]

லாளர்கள் தவிர மற்றும் 200 ஒப்பந்த தொழிலாளர்கள் கட்டிட வேலைக்காக நியமிக்கப்பட்டு இந்த 200 தொழிலாளர்களும் முன் போலவே வேலைசெய்து வருகின்றனர். இப்பொழுது தொழிற்சாலையில் அமைதியான சூழ்நிலை நிலவி வருகிறது.

திரு. என். டென்னிஸ் : ஒப்பந்த முறையில் வேலை ஆட்களை எடுப்பதில் பல சிக்கல்கள் இருப்பதால், நிரந்தரமாக வேலை ஆட்களை எடுப்பதற்கு வழிவகுப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : ஒப்பந்த முறையில் வேலை ஆட்களை எடுப்பதை கூடுமான அளவுக்குக் குறைப்பதற்கு அரசாங்கம் ஏற்கனவே முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது.

(ஆ) நெசவாளர் வேலையின்மையைப் போக்க நூல் வினியோக முறையை ஒழுங்குபடுத்தல் குறித்து.

திரு. கி. செயராமன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உயர்ந்த ரக பருத்தி நூலின் விலை பல மடங்கு உயர்ந்துள்ளதால் கைத்தறி நெசவாளர்களின் வேலை வாய்ப்பு குறைந்தும் பல இடங்களில் வேலையின்மை ஏற்படுகின்ற நிலை உண்டாவதைப் போக்க, நூல் விநியோக முறையை ஒழுங்குபடுத்த வேண்டியது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, the prices of cotton yarn, particularly in the higher counts, have increased over the last two years. At present there is no statutory control over the distribution of cotton yarn. Only a voluntary pool scheme is in vogue, under which cotton yarn under 40 counts and below are allotted to consumers at prices fixed by the Textile Commissioner. This scheme has been extended to higher counts from 1st August 1972, and 50 per cent of the production of yarn of these counts will be made available by the mills for distribution under the regulated price. The voluntary pool scheme has not been found to work satisfactorily in actual practice. The loop-holes in the scheme have been pointed out to Government of India and they have been requested to give the necessary powers to State Government to control the price of yarn and regulate the distribution.